செ.வெ. எண்: 215 நாள்: 22.03.2012

<u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால்** உருவாக்கப்பட்ட சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் பணி முன்னேற்ற ஆய்வுக் கூட்டம் **மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்கள்** தலைமையில் 22.03.2012 அன்று சென்னை சேப்பாக்கம் எழிலகம், வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்றது.

-----

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால்** அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்ற சிறப்புத் திட்டங்களின் பணி முன்னேற்ற ஆய்வுக் கூட்டம் **மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்கள்** தலைமையில் 22.03.2012 அன்று எழிலகத்தில் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அனைத்து மாவட்ட சிறப்புத் திட்ட துணை ஆட்சியாளர்கள் பங்கேற்றனர்.

தமிழக மக்களின் வாழ்வு சிறந்திட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால்** அறிவிக்கப்பட்ட சிறப்புத் திட்டங்களான இல்லத்தரசிகளுக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர் வழங்குதல், மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி மற்றும் கிராமப்புற ஏழை, எளிய குடும்பங்களுக்கு விலையில்லா கறவைமாடு மற்றும் ஆடுகள் வழங்குதல் போன்ற திட்டங்கள் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால்** 15.09.2011 அன்று திருவள்ளூர், காக்களூரில் தொடங்கி வைக்கப்பட்டு தொடர்ந்து **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின்** ஆணைப்படி அனைத்து மாவட்டங்களிலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளின் மூலம் சிறப்புத் திட்டங்களின் நலத்திட்ட உதவிகள் தொய்வில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர் வழங்குவதை விரைவுப்படுத்தவும், தொடர்ந்து பொதுமக்களுக்கு, குறிப்பிட்ட காலத்தில் நலத்திட்ட உதவிகள் சென்றடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அலுவலர்களுக்கு **மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்கள்** அறிவுரை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் தமிழக அரசின் முதன்மை செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் திரு கு. ஞானதேசிகன்,இ.ஆ.ப., அவர்கள், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை செயலர் திரு சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், வருவாய் நிர்வாக இணை ஆணையர் முனைவர் மு.ஜெயராமன் இ.ஆ.ப., அவர்கள், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை உயர் அலுவலர்கள் மற்றும் சிறப்புத் திட்ட துணை ஆட்சியாளர்கள் பங்கேற்றனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**